

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.11.2025) முகாம் அலுவலகத்தில், சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தனது பிறந்த நாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (7.11.2025) முகாம் அலுவலகத்தில், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்தபோது, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## டெல்லியில் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்!

## சிறப்பு புத்தகத்தை வெளியிட்டு நினைவுப் பரிசுகளை வழங்கினார்!

புதுடெல்லி, நவ. 8 - டெல்லியில் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்.

"100 ஆண்டுகள் ஹாக்கி" சிறப்பு புத்தகத்தை வெளியிட்டார் துணை முதலமைச்சர் வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கிய ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டின் பங்களிப்பை பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

டெல்லியில் நடைபெற்ற இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 100 ஆண்டுகள் ஹாக்கி சிறப்பு புத்தகத்தை வெளியிட்டு, வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா டெல்லியில் நடைபெற்றது. மேஜர் தயான்சந்த் தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விழாவை ஒன்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார். இவ்விழாவில் தமிழ்நாடு அரசு சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார். நிகழ்ச்சியில், முன்னாள் ஹாக்கி ஒலிம்பிக் போட்டியாளர்கள் மற்றும் ஹாக்கி வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி பாராட்டினார். தொடர்ந்து, 100 ஆண்டுகள் ஹாக்கி சிறப்பு புத்தகத்தையும் வெளியிட்டார். மேலும், கடந்த 100 ஆண்டுகளில் ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாடு சிறந்த பங்காற்றியதற்காக சிறப்பு சான்றிதழும் துணை முதலமைச்சர் உதயநிதியிடம் வழங்கப்பட்டது. ஆடவர் ஜூனியர் ஹாக்கிப் போட்டிக்கான உலகக்கோப்பை பயணமும் தொடங்கி வைக்கப்பட்டது.

விழாவில் உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி, தமிழ்நாட்டில் ஹாக்கி விளையாட்டு மிகுந்த பாரம்பரியம் கொண்டது என்றார். ஒலிம்பிக் விளையாட்டிற்காகவும், இந்திய அணிக்காகவும் எண்ணற்ற ஹாக்கி வீரர், வீராங்கனைகளை தமிழ்நாடு வழங்கி இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

**தமிழ்நாட்டில் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி ரூ.70 கோடி ஒதுக்கீடு**

ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டிற்கென்று தனிச்சிறப்பான பாரம்பரியம் உள்ளது தமிழ்நாடு ஏராளமான ஹாக்கி வீரர்களை உருவாக்கி கொடுத்துள்ளது

ஒலிம்பிக், உலகக்கோப்பை போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் அதிகளவில் பங்காற்றி உள்ளனர் மதிப்புமிக்க பல்வேறு ஹாக்கிதொடர்களை தமிழ்நாடுநடத்தி இருக்கிறது ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை2025 ஹாக்கி போட்டியை தமிழ்நாடு நடத்த உள்ளது

**முதல்முறையாக 24 நாடுகள் பங்கேற்கின்றன**

சென்னை, மதுரையில் ஹாக்கி போட்டிகள் நடைபெற உள்ளன இந்த தொடருக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.70 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஹாக்கி விளையாட்டு பிரபலமாகியுள்ளது

விளையாட்டில் தமிழ்நாடு சிறந்து விளங்க முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டமே காரணம் தமிழ்நாட்டில் 11,000 ஹாக்கி வீரர், வீராங்கனைகள் இருப்பது பெருமையாக இருக்கிறது

அவர்கள் அனைவரும் கல்லூரி, பல்கலைக்கழக, முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் விளையாடுகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.



நவம்பர் 1 அன்று ஆஸ்திரேலியாவில், பெரியார் பன்னாட்டு மையம் மற்றும் பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டம் (PATCA) இணைந்து நடத்திய 4ஆம் பன்னாட்டு மனிதநேயர் மாநாட்டின் தொடக்க விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தந்தை பெரியார் மற்றும் பாபுசாகேப் அம்பேத்கர் அவர்களின் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.

## தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ. – ம.தி.மு.க. மல்லிகா தயாளன் கண்டன உரை!

# காஞ்சிபுரத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் "SIR" கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், நவ. 8 தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு "SIR" கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வருகிற 11 ஆம் தேதி அன்று காலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறுகின்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் எம்.எல்.ஏ., ம.தி.மு.க. மகளிர் அணி மாநிலச் செயலாளர் மல்லிகா தயாளன் கண்டன உரை நிகழ்த்துகின்றனர்.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள கழகத் தோழர்கள் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் தோழர்கள் அனைவரும் பல்லாயிரக் கணக்கில் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டம் வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு

இந்திய நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் எஸ்.ஐ.ஆர். என்னும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை தொடக்கம் முதலில் இருந்து எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும்



இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், அது மட்டுமல்லாமல் நவம்பர், டிசம்பர் மாதங்களில் தான் வட கிழக்கு பருவ மழையின் தாக்கம் அதிகமாக இருக்கும். இச்சமயத்தில் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (SIR) கொண்டு வந்து தமிழ்நாட்டில் திணித்திருப்பது அதன் பலன் முழுமையாக பூர்த்தியாகாது என்பது மட்டுமல்லாமல் தகுதியான வாக்காளர்கள் இந்த ஜனநாயக மூலம் சேர்த்திட இயலாமல் போய் விடும் அதன் காரணமாகவே தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை தற்போது கொண்டு வந்துள்ளது.

இத்தகை எதிர்ப்புக்கிடையே கடந்த நான்காம் தேதி அன்று வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுக்கான விண்ணப்பப் படிவத்தை வழங்கி வருகிறார்கள். 2002/2005 ஆம் ஆண்டில் வாக்காளர்களாக இருந்தவர்களுக்கு மட்டுமே இந்த விண்ணப்பப் படிவம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த இருபது ஆண்டுகாலமாக வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை இணைத்த வர்களுக்கு இந்த விண்ணப்பப் படிவம் வழங்கப்படவில்லை. அவர்கள் புதியதாக சேர்ப்பதற்கும் பலவித குளறுபடிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற ரீதியில் இந்தியத் தேர்தல் ஆணையத்தால், வாக்காளர் சீராய்வு என்கிற பெயரில் இந்தியத் திருநாட்டு மக்களை பாடாய் படுத்தும் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து வருகிற 11 ஆம் தேதி அன்று காலை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களின் அறிவிப்பிற்கிணங்க, நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் ஆகியோரின் அறிவுறுத்தலின் படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு "SIR" யைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வருகிற 11.11.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணிக்கு, காஞ்சிபுரம் காவலன் கேட் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்) என் (மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையில் நடைபெறுகின்றது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன் எம்.எல்.ஏ., ம.தி.மு.க. மாநில மகளிர் அணிச் செயலாளர் மல்லிகா தயாளன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்துகிறார்.

எனவே இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (SIR) உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில்,

நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூர், பகுதி, வட்ட, வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், தோழர்கள் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் பொதுமக்கள் என அனைவரும் தவறாது பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கரூர் – அரவக்குறிச்சி தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# 3063 பேருக்கு ரூ.9.74 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர்.நவ.8- கரூர் மற்றும் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் மனு அளித்த 3063 நபர்களுக்கு ரூ.9.74 கோடி மதிப்பிட்டில் அரசுநலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற அற்புதமான சிறப்பு வாய்ந்த திட்டத்தை தொடங்கி வைத்து. தமிழ்நாடு முழுவதும் 10.000 முகாம்கள் நடத்துவதற்கான அனுமதிகொடுத்து. அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் 179 முகாம்கள் கடந்த 15.07.2025 அன்று தொடங்கப்பட்டு, 29:102025வரை மிகச்சிறப்பாக நிறைவு பெற்றிருக்கிறது.

அந்த முகாம்களில் ஊரகப்பகுதிகளில் 101, நகர்ப்புறப்பகுதிகளில் 78 முகாம்களும் சிறப்பாக நடந்து முடிந்ததில் ஏறத்தாழ 70,000 மனுக்கள் வரப்பெற்றிருக்கின்றன. இந்த 70,000 மனுக்களை பரிசீலனை செய்யப்பட்டதில், இதுவரை 52497 மனுக்களுக்கு முழுமையாக ஏற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள மனுக்களுக்கு விரைவில் தீர்வு எட்டப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் 1 கோடியே 10 லட்சம் பேர் பயன்பெற்று வருகிறார்கள். விடுபட்டவர்களுக்கும் ஒருவாய்ப்பாக 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்கள் மூலமாக மனுக்கள் கொடுக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. மிக விரைவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் மாதம் ரூ.1000 வழங்கப்படும்.

பட்டாக்கள் சம்பந்தமாக 5991 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்காக 928 மனுக்களும், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்க கோரி 915 மனுக்களும், தையல் இயந்திரம் கோரி 743 மனுக்களும். சலவைப்பெட்டி கோரி 81 மனுக்களும் என ஏறத்தாழ 52498 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது.

அரிக்காரம்பாளையத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுமனைப் பட்டா இன்றி குடியிருந்த வர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரூர் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ரூ. 328 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்து குடிநீர், சாலை, மின் விளக்கு உள்ளிட்ட அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுத்து, மேலும் மாநகராட்சியில் மண் சாலையே இல்லாத முதன்மை மாநகராட்சியாக மாற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற முகாம்களில் மனு அளித்த மொத்தம் 3,063 நபர்களுக்கு ரூ.9.74 மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (07.11.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் இராயபுரம் மண்டலம், வார்டு55க்குட்பட்ட ஏழுகிணறு தெருவில் துறைமுகம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.95 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டத்தினைத் திறந்து வைத்து, இதில் அமைக்கப்பட்டுள்ள நியாய விலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் தாஹாநவீன், உதவி ஆணையாளர் திருமதி கற்பகவள்ளி, கூட்டுறவு துணை பதிவாளர் திருமதி சுதா மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் தொகுதி திருப்பாச்சூரில் உள்ள சமுதாயக்கூடத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைத்து மனு அளித்த பல்வேறு பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் சான்றிதழ் வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் துணை அமைப்பாளர் தா.மோதிலால், காஞ்சிபாடி சரவணன், பாஸ்கர், எம்.எம்.லிங்கேஷ்குமார், தா.நடராஜன், ரகு, மஞ்சு லிங்கேஷ், விஜயகுமார், துளசி, மணி, மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.